# <u>தமிழில் குடமுழுக்கு சரியா?</u>

மு.சம்பந்தம், பண்ணிசை ஆசிரியர், பெங்களூர்.
அலைபேசி : 97315 47236

திருச்சிற்றம்பலம்.

தென்னாடுடைய சிவனே போற்றி . எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.

காரைக்கால் அம்மையார் தொடங்கி பன்னிரு திருமுறை அருளாளர்கள் அருளாளர்கள் அருளிய திருமுறைகளை போற்றி வணங்கும் மெய்யடியார்களுக்கு பணிவான வணக்கம்.

வேதங்களை கல்லால் நிழற்கீழ் அமர்ந்து சனகாதி முனிவர்களுக்கு வேதத்தை சிவபெருமான் உபதேசித்தார். அந்த வேதத்திற்கு பாடியம் போன்றது சிவனாரின் ஆகமங்கள் ஆகும்.

வேத- ஆகம முறை வழிபாடு நடந்து கொண்டிருந்த காலத்தில்தான் காரைக்கால் அம்மையார் தொடங்கி சமயச்சாரியார்கள், சேந்தனார், திருமூல தேவ நாயனார் மற்றும் பல அருளாளர்கள் தமிழில் இறைவனைப் பாடி வழிபட்டனர்.

அப்படி திருமுறைகளை பாடிய காலத்த்திலேயே ஆகம முறை வழிபாடே கோயில்களில் நடந்து வந்தது. மூன்று வயதில் ஞானப்பால் உண்டு தோடுடைய செவியன் என பாடியருளிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தன்னுடைய 16 ஆவது வயதில் நல்லூர் பெருமணத்தில் திருமணத்திற்கு வந்திருந்த அனைவரோடும் சிவனாரின் ஜோதியில் கலந்து திருவடிப்பேறு பெற்ற வரை பாடியருளிய திருமுறை பதிகங்களை கொண்டு அவர் எங்குமே யாகம் வளர்த்தோ, கிரகப்பிரவேசம் செய்தோ, திருமணம் செய்து வைத்ததாகவோ வரலாறு இல்லை. தமிழில் திருமுறைகளை பாடி அருளியது பாடுமின், பணிமின் , தொழுமின் என அந்தந்த திருத்தலத்து இறைவனை போற்றி, வணங்கி பாடியருளியதாகும்.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் மட்டுமல்ல, திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்க வாசக ஸ்வாமிகள் என சமயாச்சாரியார்கள் நால்வருமே எந்த பொழுதிலும் திருமுறைகளை பாடி ஹோமம் வளர்த்ததில்லை. ஏனென்றால் கோயில் அமைப்பு, கும்பாபிஷேகம், திருவிழாக்கள் என அனைத்துமே சிவபெருமான் அருளிய ஆகமங்களில்

அருளப்பட்டுள்ளவையே.

சமயாச்சாரியார்கள் திருமுறைகளை அருளியது இறைவனை சொல்லால் பாடி பணிந்து போற்றி வழிபடவே அல்லாமல் அத்திருமுறைகளை கொண்டு ஆகம கிரியைகள் செய்ய அல்ல. இதுவே சமயாச்சாரியார்கள் நால்வர் மனப்பாங்கிற்கு விரோதமானதாகும். திருமுறைகளை சொல்லி ஹோமம், கும்பாபிஷேகம் செய்யலாம் என்றால் சமயாச்சாரியார்கள் நால்வரே செய்திருப்பார்களே... அவர்கள் ஏன் செய்யவில்லை என்பதை தயவு செய்து சிந்திக்க வேண்டும். சமயாச்சாரியார்களே செய்யாத ஒன்றை சமயாச்சாரியார்கள் அருளிய திருமுறைகளை கொண்டு செய்வது அவர்களுக்கு செய்யும் துரோகம் அல்லவா?

அடுத்து, கோயில் குடமுழுக்குகள் புதிதாக கட்டப்பட்டது, பழைய கோயில்கள் திருப்பணி செய்யப்பட்டது, 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்யப்படும் குடமுழுக்குகள் அனைத்துமே ஆகமங்களில் அருளப்பட்டுள்ளவையே... அந்த ஆகமங்களிலே அருளப்பட்டுள்ள கும்பாபிஷேகம் என்னும் குடமுழுக்கை இவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் ஆகம முறைப்படி தான் குடமுழுக்கு செய்யப்பட வேண்டும் என்கிற விதியை இவர்கள் புறக்கணிக்கிறார்கள். எனவே, இவர்கள் ஆகம முறை குடமுழுக்கு அல்ல தமிழ் முறை குடமுழுக்கு என்பதே பொய். குடமுழுக்கு என்பதே ஆகமங்களேயே அருளப்பட்டுள்ளது. அந்த ஆகமங்களிலேயே எத்தனை காலம் யாகசாலை பூஜை, ஒவ்வொரு காலத்தில் என்ன ஸ்வாமிக்கு என்ன மந்திரங்கள் ஓதப்பெறவேண்டும் என்கிற குடமுழுக்கின் ஒவ்வொரு நிகழ்வும் ஆகம முறையிலேயே செய்தார்கள்,

சரி, ஆகம முறை என்றால் தமிழுக்கு இடமில்லை. திருமுறைகளுக்கு இடமில்லை என இவர்களே முடிவு செய்து கொண்டு தமிழ் மொழி பற்றாளர்களிடம் வேத-ஆகம துவேஷத்தை இவர்கள் வளர்க்கிறார்கள். இவர்கள் கூறுவதை உண்மையென நம்பி வேத-ஆகம துவேஷத்தை பிறரும் செய்கிறார்கள். இவர்கள் செய்யும் கும்பாபிஷேகம் என்பதே ஆகம முறைதான்.

மேலும், வேத ஆகம முறையில் தான் யாக குண்டம் அமைத்து, அக்னி மூலமாக சிவனாருக்கு அவிற்பாகம் அளித்து, கிரியைகளை செய்வார்கள். அந்த ஆகம முறை யாகத்தில் பூர்ணாகுதிக்கு முன்பு இந்த காலத்தில் இந்த பண் திருமுறை ஓதப்பட வேண்டும், என முறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஏனெனில் வேத மந்திரங்களை சொல்லி அக்கினி மூலமாக சிவபெருமானை வழிபட்டு, பின்பு பண்ணிசை மூலமாக தமிழில் திருமுறைகளை பாடி பின்பு பூர்ணாகுதி செய்வதே யாகசாலை ஆகம விதியாகும். இவர்கள் அந்தணர்களைப்போல ஹோமம் செய்ய ஆசைப்பட்டு ஹோமம் செய்கிறார்களே தவிர இவர்கள் செய்வதற்கு எந்த வித பிரமாண நூலும் இல்லை.

2500 ஆண்டுகளுக்கு முன்பு சிவாலயங்கள் மரத்தினால் கட்டப்பட்டதாகவும், பிற்காலத்தில் கற்றளியாக கட்டப்பட்டதாகவும் கல்வெட்டுகள் கூறுகின்றன. தஞ்சை பெருவுடையார் கோயிலை கட்டிய சோழப் பேரரசர் ஸ்ரீ ராஜ ராஜ சோழர் கோயிலை கட்டி 48 திருமுறை பாடும் ஓதுவார்களையும், அதற்கு பக்க இசை முழவு, உடுக்கை வாசிப்போர் மூன்று பேரும் சேர்த்து 51 பேரை நியமித்தார் என வரலாறு கூறுகிறது. "திருப்பதிகம் விண்ணப்பம் செய்ய" எனவே நியமித்ததாக வரலாறு கூறுகிறது.

ஸ்ரீ ராஜ ராஜ சோழ தேவர் தஞ்சை பெருவுடையார் கோயிலை கட்டி குடமுழுக்கு செய்த போது இவர்களைப்போல திருமுறைகளை சொல்லி ஹோமம் செய்து கும்பாபிஷேகம் செய்தாரா? இல்லை வேத, ஆகம முறையில் கும்பாபிஷேகம் செய்து திருமுறைகளை விண்ணப்பம் செய்ய ஓதுவார்களை நியமித்தார் என்பது வரலாறு.

திருமுறைகள் நமக்கு கிடைக்க காரணாய் இருந்த ஸ்ரீ ராஜ ராஜ சோழர் வேத-ஆகம முறையில், திருமுறைகளையும் ஓதி குடமுழுக்கு செய்வித்த போது, அவர் கடைபிடித்த வழிபாட்டு முறைக்கும் விரோதமாக இவர்கள் திருமுறைகளை சொல்லி ஹோமம், குடமுழுக்கு என்பது சோழநாட்டுக்கே பெரும் இழுக்காகும்.

வேத-ஆகம முறை கிரியைகளிலேயே திருமுறைகளுக்கு உரிய இடம் இருக்கிறது. அதை இவர்கள் அறிந்து கொள்ளாமல் சிவனாரின் இரு கண்களான சமஸ்கிருதம்-தமிழ் இரண்டு மொழிகளுக்கும் வேற்றுமை பாராட்டி பிரித்து பார்த்து வருகிறார்கள். இவர்கள் இப்படி செய்ய காரணம் என்ன? இவர்கள் நாத்திக கருத்துக்களை உள்வாங்கி அதாவது இவர்கள் கடவுள் மறுப்பாளர்கள் அல்ல... ஆனால், நாத்திகர்களின் சமஸ்கிருத எதிர்ப்பு, பிராமணர்கள் எதிர்ப்பு என்ற இரு கருத்துக்களை உள்வாங்கி அதை தங்கள் வாழ்வில் கடைபிடிக்கிறார்கள். எந்த ஒரு வழிபாட்டிற்கும் முறை உண்டு.

இப்படி சொன்னால் உடனே கண்ணப்பர் வரலாறு, மூர்க்க நாயனார்

வரலாறு என பேசி தற்போது அவர்கள் செய்யும் தவறுக்கு சான்று தேடுவார்கள். நாயன்மார்கள் தங்கள் தொண்டின் மூலம் சிவனாரின் திருவடிப்பேறு பெற்றதையே நாம் திருத்தொண்டர் புராணத்தில் படிக்கிறோம். அதனால் நாங்களும் விதிமுறைகளை மீறி செய்வோம் என்பது நகைப்புக்குரியதாகும். நாயன்மார்கள் தங்கள் தொண்டின் மூலம் சிவனாரின் காட்சியையும் திருவடிப்பேறையும் பெற்றார்கள். இவர்கள் தவறான முறையில் வழிபாடுகளை செய்து விட்டு நாயன்மார்களுடன் தங்களை தாங்களே ஒப்பிட்டுக்கொள்வதை எப்படி ஏற்பது? நாயன்மார்களிலேயே உள்ளத்தில் கோயில் கட்டிய பூசலார் நாயனார் ஆகம முறையிலேயே கட்டி குடமுழுக்கு செய்தார் என்பதை சேக்கிழார் பெருமான்

" சாதனத் தோடு தச்சர் தம்மையும் மனத்தால் தேடி
நாதனுக்கு ஆலயம் செய் நலம் பெறு நல்நாள் கொண்டே
ஆதரித்து ஆகமத்தால் அடிநிலை பாரித்து அன்பால்
காதலில் கங்குல் போதும் கண்படாது எடுக்கல் உற்றார்"

பாடல் எண் 6, பூசலார் நாயனார் புராணம், திருத்தொண்டர் புராணம்.

அருளி இருக்கிறார்கள், இப்படி சமயாச்சாரியார்கள், திருமுறை அருளாளர்கள் அனைவருமே செய்யாத ஒன்றை அவர்கள் அருளிய திருமுறைகளை கொண்டு செய்வது மாபெரும் பாவமாகும். இவர்களின் பேச்சையும் செயலையும் நம்பி பின்செல்வோர் அனைவரும் "சமயாச்சாரியார்கள் செய்யாத ஒன்றை செய்து சிவத்துரோகம் செய்கிறோம் " என்பதை உணருங்கள். இதைப்போல இவர்கள் திருமுறைகளை சொல்லி கிரியைகள் செய்வது தவறென்பதற்கு நிறைய சான்றுகள் இருக்கின்றன. வேத ஆகமங்களில் திருமுறைகள் புறக்கணிக்கப்படவில்லை. இத்தனை ஆண்டுகளாக திருமுறைகள் ஆகம முறை வழிபாட்டில் இணைந்தே இருக்கின்றன. தற்போதும் அப்படியே.

மேலும் தேவைப்பட்டால் சான்றுகள் அளிக்கிறேன். எனவே இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு வரும் காலத்தில் வழிபாடுகளும், வழக்குகளுக்கு தீர்ப்பளிப்போறும் நடந்து கொள்ள எல்லாம் வல்ல சொக்கேசன் திருவடி மலர்களை வணங்கி இம்மட்டில் இவ்விளக்கத்தை முடிக்கிறேன். தேவையெனில் தொடரும்.

திருச்சிற்றம்பலம்.